**ஹபுதளை நகர சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 மே 18 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 மே 27 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து ஹபுதளை நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் 04 ஒப்பந்தத்திற்கான ஒப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,997,565 கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். |
| (ii) | கடந்த வருடம் தொடர்பான உறுப்பினர் சட்டம் ரூபா 147,200 மற்றும் பயிலுனர் சம்பளம் ரூபா 6,360 ஆகியன மீள் நிரப்பல் செய்ய முடியாது என மாகாண உள்ளக ஆணையாளர் திணைக்களத்தில் இருந்து அறிவுறுத்திய போதும் அந்த செலவுத் திரட்டு நிதிக்கு வரவு வைத்து வருமதியாளர் கணக்கில் செலவு வைக்க வேண்டிய போதிலும் அதனை சில்லறை கடன் கொடுநராக கணக்கிடப்பட்டுள்ளன. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். |

(ஆ) கணக்காய்வுக்கென சாட்சிகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 56,470,676 பெறுமதியான காணி மற்றும் கட்டிட மீதிக்கான உறுதிப்படுத்தும் ஆவணம், தொகையுள்ள இணைப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றில் காட்டப்பட்ட கணக்கு மிகுதியை உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகள் இணைக்கப்பட வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நகர சபை சட்டம் 180(1) (2) பந்திகல் | வரவு மற்றும் செலவு பற்றிய விபரமான அறிக்கை 2015 தொடக்கம் 2019 வரை வருடத்திற்கான அறிக்கை அதன்படி தயாரித்து சமர்ப்பிக்கப்படவில்லை. | நகர சபை சட்டம் இருக்கும் அதிகாரப்படி சடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் நிதிப்பிரமானம் 371 | சபையினால் பல்வேறு நோக்கத்திற்கு வழங்கப்பட்ட 12 சந்தர்ப்பங்களுக்கான கூட்டு மொத்தம் ரூபா 140,480 உபகட்டுநிதி 02 வருடத்திற்கு மேலான காலம் அதிகரித்திருந்த போதும் அதனை தீர்ப்பனவு செய்யப்படவில்லை. | நிதிப் பிரமானங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,254,246 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,665,338 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிதிநிலமைக் கூற்றில் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிதிநிலமைக் கூற்றில் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,846,014 | 2,062,126 | 1,967,572 | 94,554 | 1,845,351 | 1,845,351 | 1,565,961 | 279,391 |
| (ii) | வாடகைகள் | 17,775,987 | 16,152,406 | 13,484,476 | 2,667,930 | 16,444,277 | 16,444,277 | 11,347,817 | 5,096,460 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 735,000 | 568,850 | 568,850 | - | 325,000 | 325,000 | 380,600 | (55,600) |
| (iv) | ஏனைய வருமானம் | 1,274,026 | 1,097,810 | 1,120,419 | (22,609) | 1,057,921 | 1,057,921 | 1,517,147 | (459,226) |
| | மொத்தம் | 21,631,027 | 19,881,192 | 17,141,317 | 2,739,875 | 19,672,549 | 19,672,549 | 14,811,525 | 4,861,025 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு மேலதிகமான காலப்பகுதியில் காணப்பட்ட கி.வே வருமானம் ரூபா 14,092,761 கட்டணம் அறவிடப்படவில்லை. | கிடைக்க வேண்டிய வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 404,686 பெறுமதியான நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 441,294 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவைகள், பொது வழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபை சட்டம் 157 பந்தியின் பிரகாரம் மிக முக்கியமான காரணம் 25 நிறைவேற்ற உபவிதி செய்ய வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு 24 காரணத்திற்காக உபவிதிகள் செய்யப்பட்டது அல்லது உள்ளீர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகள் செய்ய வேண்டிய காரணத்திற்காக உபவிதி தயாரிக்க வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவை பெற்றிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தி இனங்காணப்பட்ட நிலை பேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கு என்பவற்றை அளவிட்டுக்கொள்ளும் குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்தை அளவீடு செய்யும் குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க வருடாந்த இலக்குகளை அடைவது தொடர்பான விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும் | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். |

**(இ) சுற்றுச்சூழல் பிரச்சனைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| சுற்றுச் சூழல் குப்பைக் கழிவுகள், கழிவு நீர் வெளியேற்றம் அவ் நிறுவனம் வருடாந்தம் சுற்றாடல் அனுமதி பெறவேண்டிய போதும் 29 வியாபாரங்கள் இதன்படி சுற்றாடல் அனுமதி பெறவில்லை. | சுற்றாடல் விதிகளின் படி அனுமதி கொடுக்க வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். |

**3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண உள்ளக ஆணை 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய இலக்கம் 1980/46 ஆகிய சுற்றறிக்கையின் படி 5 வருடத்திற்கு ஒரு தடவை சொத்துக்கள் விலைமதிப்பீடு செய்ய வேண்டிய போதும் நகர சபை எல்லைக்குள் உள்ள வரி அறவிடப்படும் சொத்துக்களுக்காக 2007 ஆம் வருடத்திற்குப் பின் விலைமதிப்பீடு செய்யாமல் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. | சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேணடும். | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். |
| (ஆ) | ஒரு வருடத்திற்கு அதிகமான காலத்தில் இருந்து காணப்பட்ட செலுத்த வேண்டிய ரூபா 1,479,176 மீளாய்வாண்டில் செலுத்தவில்லை. | செலுத்த வேண்டிய நிலுவை செலுத்த வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். |

**3.3 பெறுகைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கு பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் தயாரிக்க வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டியில் 5.4.6 பந்தி தொடர்பாக சேவை மற்றும் ஒப்பந்த வேலைக்கான சேவைக்காலத்திலும் பிடி பணம் பிடித்திருக்க வேண்டிய போதும் சபையால் நடைமுறைப்படுத்திய ரூபா 393,598 பெறுமதியான 04 ஒப்பந்தத்திற்காக எந்தவித பிடி பணமும் இருக்காது முழு கொடுப்பனவும் ஒப்பந்ததாரருக்கு செலுத்தியிருந்தது. | சபைக்கு அறவிட வேண்டிய காசு அறவிட வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். |
| (இ) | 2006 பெறுகை வழிகாட்டியில் 2.7.7 பந்தி பிரகாரம் பிராந்திய பெறுகைக்குழுவில் 03 உறுப்பினரில் 01 உறுப்பினர் 03 ஆம் நபர் நிறுவனத்தில் ஒரு ஆள் எடுக்க வேண்டிய போதும் 06 சந்தர்ப்பத்தில் அதன்படி செய்யவில்லை. | பெறுகை வழிகாட்டியின் படி நடவடிக்கை எடுக்க வேணடும். | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கணக்காய்வு முகாமைத்துவ குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டுநிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் 2 மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | குறைந்தது ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒன்றுப்படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். |

**4.2 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் உள்ளக கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு செய்யப்பட வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். |